முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *154*, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

154—

சுற்றுலா மையம்

***2312—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, பாலமதி கிராமத்தைச் சுற்றுலா மையமாக்கி சுற்றுலாத் துறை மூலம் வசதிகளைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் தொகுதி, பாலமதி கிராமத்தைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தொகுதியிலே இருக்கக்கூடிய இந்தப் பாலமதி மலை ஓர் அழகிய மலை. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, அந்த இடத்திலே சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் கோயில், முருகன் கோயில் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. வேலூர் தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான பொழுதுபோக்கும் இல்லாத காரணத்தினாலே, அடிக்கடி இலட்சக்கணக்கிலே மக்கள் இந்த மலைக்கு வந்து போகிறார்கள். ஆகவே, இதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. நீங்கள்

2002 ஏப்ரல் 17]

அறிவிப்பதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை ஒரு சென்டராக மாற்றி, அதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். காரணம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே, இதேபோல நான் கேள்வியைக் கேட்டு, ஒரு assurance கிடைத்து, பிறகு சுற்றுலா அலுவலர், காஞ்சிபுரத்திற்கு வந்து அந்த இடத்திலே estimate எல்லாம் எடுத்துக்கொண்டு போனார். ஆனால், காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய அந்தச் சுற்றுலா அலுவலர் மீண்டும் அந்தப் பக்கம் திரும்பாத காரணத்தினாலே, அந்த இடம் இன்றும் ஒரு சுற்றுலா மையமாக மாறாமல் அடிப்படை வசதிகளின்றி தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தயவு செய்து, அந்த சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் கோயிலுக்கும், முருகன் கோயிலுக்கும் வருகை தந்து, அதை ஒரு சுற்றுலா மையமாக மாற்றி, அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவீர்களா? சுற்றுலாத் துறை மூலம் பஸ்களை இயக்கினால்கூட, வேலூர் கோட்டை பக்கத்திலே நிறைய கோயில்கள், வெட்டுவானம், அதேபோன்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்ச்சுக்குப் போகின்றவரைக் கொண்டுபோய் நீங்கள் கோயிலிலே கொண்டுபோய்த் தள்ளினீர்கள் என்றால் எப்படி? (சிரிப்பு) சர்ச்சுக்குப் போகின்றவரைக் கொண்டுபோய் நீங்கள் கோயிலிலே தள்ளினால் எப்படி?

திரு. சி. ஞானசேகரன்: இருந்தாலும், சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர், அவரையும் ஈர்க்கக் கூடிய சக்தி நிச்சயமாக இருக்கும் என்ற காரணத்தினாலே, அவரும் வந்து, அந்த இடத்திலே சுற்றுலாத் துறை மூலம் பஸ்களை வேலூரிலிருந்து இயக்குவீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். காஞ்சிபுரம், அதேபோல திருத்தணி, ரத்தினகிரி மற்றும் திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்குச் சென்னையிலேயிருந்து இயக்கப்படுவதுபோல நீங்கள் Package Tour பஸ்களை அந்த இடத்திலிருந்து இயக்கினால் அரசுக்கு நிறைய வருவாய் வரும் என்கின்ற காரணத்தினாலே, அதையும் அமைச்சரவர்கள் பரிசீலிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் நகர எல்லையிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் பாலமதி என்ற மலைக் கிராமம், கடல் மட்டத்திலிருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சியைச் சுற்றி செட்டோரி, கிருஷ்ணாபுரம், அரசக்குளம், செங்காநத்தம் ஆகிய

மலைக் கிராமங்கள் உள்ளன. பாலமதியில் சுமார் 2,000 மக்கள் வசிக்கிறார்கள். பாலமதி கிராமம் இயற்கை அழகுக்கு இடையிலே அமைந்துள்ளது. ஏழு கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட மலைப் பாதை இந்தக் கிராமத்தை அடைகிறது. இங்கே உள்ளே ஆஞ்சநேயர் கோயில் சுமார் 100 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது. கோயில் அருகில் சுனையும், குளமும் மற்றும் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் ஓர் அழகிய ஏரியும் உள்ளது. அருள்மிகு முருகன் கோயில் இம்மலைக் கிராமத்தின் முக்கியத் தலமாகும். இந்தக் கோயிலிலிருந்து வேலூர் நகரத்தின் பரந்த காட்சிகள், சுற்றிலும் அமைந்துள்ள மலைகளின் எழில்கள் மற்றும் அழகிய சுற்றுச் சூழல்களைக் கண்டு களிக்கலாம். இந்த மலைக் கோயில் ஒரு மலைக்குன்றின்மீது அமைந்துள்ளது. மலைக்குன்று கோயிலுக்கு சுமார் 120 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பிரதான சாலையிலிருந்து, தார்ச் சாலையும் பெரிய மைதானமும் உள்ளது. பாலமதிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்கு ஏற்றவாறு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் வேலூர் நகரத்திலிருந்து 10 பேருந்துகள் வந்து செல்கின்றன. கிராமப் பஞ்சாயத்திலிருந்து பாலமதி மலையில் ஆங்காங்கு குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள வேலூரில் அனைத்து வசதிகளும் உள்ளன. 2002-2003-ல் மேலும் பல புதிய இடங்கள் கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும். அதற்கான கருத்துருக்களை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று நிதிநிலைக்கு ஏற்ப 2002-2003-ல் பாலமதி மலையினை மேம்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை இந்த அவைக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், பரிசீலிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி. அந்தப் பாலமதி மலைக்கு அடிவாரத்தில் இருக்கக்கூடிய ஓட்டேரி ஏரியில் படகு விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்., அதேபோல, வேலூர் கோட்டையைச் சுற்றி இருக்கக்கூடிய அகழியிலே நீங்கள் சுற்றுலாத் துறை மூலம் படகு விட்டீர்கள் என்று சொன்னால் நிறைய மக்களுக்கு அது வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சரவர்கள்......

2002 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மலையிலிருந்து கீழே இறங்கிவிட்டீர்கள். வேண்டாம்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 2, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

2—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

***19536—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு மற்றும் அதில் ஆக்கிரமிப்பிற்கு உள்ளான நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களின் மொத்த பரப்பளவு 4,79,021 ஏக்கர் 23 சென்ட்.

ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களின் பரப்பளவு 6,720 ஏக்கர் 80 சென்ட்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளின் பரப்பளவு 33,627 கிரவுண்ட் 0239 ச.அடி

ஆக்கிரமிப்பில் உள்ள மனைகளின் பரப்பளவு 2,400 கிரவுண்ட் 0415 ச.அடி.

(ஆ) ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் வழிவகை உள்ளது.